SC. 131/2024

நாள் : 16.07.2024

Pw.59 சங்கர்

A1, A3, A4, A9, A11, A12, A14, A15, A16, A17 absent. Sec.317 Cr.P.C petition filed and allowed. A5, A18 - Died. Other accused present.

10, 13 மற்றும் 15 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

சாவடி சிதம்பரம், ஆழ்வார்குறிச்சி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கல்யாண சுந்தரம் ஆகியோர்களை முதல் நாள் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன். வேறு யாரையும் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்ததாக ஞாபகமில்லை. நான் கண்ணுற்ற சாட்சிகளை விசாரிக்கவில்லை. சாவடி சிதம்பரம் மற்றும் கல்யாண சுந்தரம் ஆகியோர்களை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வாக்குமூலம் என் கைப்பட எழுதப்பட்டது ஆகும். குற்றப்பத்திரிக்கையில் 1 முதல் 74 பட்டியல் சாட்சிகளின் வாக்குமூலங்கள் கையால் எழுதப்பட்டதுதான். அவைதான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதா என்றால் சரிதான். முதல் 74 பட்டியலில் கூறப்பட்ட சாட்சிகள் தட்டச்சு செய்யப்படவில்லை. அ.சா.ஆ.1 ல் பைப் வெடிகுண்டை வீசிய நபர் ஐயப்பன் என்ற நபரும், அவருடன் மாரியப்பன் என்ற நபரும் நின்று கொண்டிருந்ததாக குறிப்பாக கூறப்பட்டுள்ளதா என்றால் பெயர் பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. பார்த்தால் அடையாளம் காணும் நபர்கள் என்றுதான் கூறப்பட்டுள்ளது. புலனாய்வு முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படும் வரை வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் 10, 13 மற்றும் 15 எதிரிகளின் பெயரை என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். ஆனால் அடையாளம் காண்பித்தார்கள். அ.சா.ஆ.1 மற்றும் கண்ணுற்ற சாட்சிகளின் வாக்குமூலங்களில் 10 வது எதிரி சுரேஷ் அரிவாளை வைத்து வெட்டியதாக கூறப்படவில்லை என்றால் பெயர் மட்டும் கூறவில்லை. மற்ற விபரங்கள் கூறினார்கள். 10, 13 மற்றும் 15 எதிரிகளின் பெயர்களை கண்ணுற்ற சாட்சிகளுக்கு விசாரணையின்போது நான் கூறினேனா என்றால் அவர்கள் அடையாள

அணிவகுப்பு நடத்திய பின்னர் கூறினேன். மாரியப்பன் என்பவருக்கு அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை. ஆனாலும் அவரை பெயரை கூறினேன். மேற்படி மூவரின் பெயரையும் சாட்சிகளுக்கு கூறியதாக வழக்கு கோப்பில் துலங்கும். கண்ணுற்ற சாட்சிகளின் வாக்குமூலங்களில் துலங்குமா என்றால் துலங்காது. அடையாள அணிவகுப்பில் நடத்திய நடுவர் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட்ட நபர்களின் பெயரை சாட்சிகளுக்கு அவர் கூறினாரா என்று எனது ஆவணங்களில் துலங்காது. சாட்சிகள் கேட்டுக்கொண்டதால் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்ட எதிரிகளின் பெயரை நான் கூறினேன். எதற்காக அவர்கள் கேட்டார்கள் என்று எனக்கு தெரியாது. நானும் கேட்கவில்லை. எதிரிகளின் பெயரை சொல்லக்கூடாது என்று எனக்கு தெரியாது. வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் எதிரிகளை அடையாளம் காட்டி பெயர் கூறியதற்கு வசதியாக இருக்கும்பொருட்டு நான் அவ்வாறு எதிரிகளின் பெயரை சாட்சிகளுக்கு கூறி தயார்படுத்தி வைத்தேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகளின் பெயரை சாட்சிகளுக்கு கூறிய தகவலின் அடிப்படையில்தான் சாட்சிகள் நீதிமன்றத்தில் மேற்கண்ட எதிரிகளை அடையாளம் காட்டியுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் 3 ஆயுதங்கள் கிடப்பதாக சாட்சிகள் புகாரிலும், அன்றைய தினம் நான் விசாரித்த வாக்குமூலத்திலும் குறிப்பாக கூறவில்லை என்றால் சரியல்ல கூறப்பட்டுள்ளது. விட்டுசென்ற ஆயுதங்களை எந்த எந்த நபர்கள் விட்டு சென்றார்கள் என்று நான் சாட்சிகளிடம் குறிப்பிட்டு விசாரித்தேனா என்றால் அடையாள அணிவகுப்பிற்கு பின்னால் அவ்வாறு கூறினார்கள். மேற்கண்ட சாட்சிகள் எனது விசாரணையில் எந்த ஆயுதம் யாரால் விட்டு சென்றது என்று குறிப்பிட்டு கூறவில்லை. குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யும்வரை எந்த சாட்சியும் என்னிடம் எந்த நபர் எந்த ஆயுதத்தை விட்டு சென்றார் என்று வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கூறிய வாக்குமூலத்தில் அவ்வாறு கூறப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 ல் சம்பவ இடத்தில் இருந்து

எதிரி ராதாகிருஷ்ணன் ஒரு அரிவாளை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார் என்று கூறப்படவில்லை என்றால் சரிதான். 07.01.2010 அன்று விசாரிக்கப்பட்ட சாட்சிகளும் அவ்வாறு கூறவில்லை என்றால் சரிதான். பெயர் மட்டும் கூறவில்லை. அ.சா.ஆ.1 ல் Travel bag கருப்பு நிற பையில் ஒரு நாட்டு வெடிக்குண்டு காணப்பட்டதாக கூறப்படவில்லை என்றால் சரிதான். கருப்பு நிற பேக் என்ற விபரம் மட்டும் இல்லை. கண்ணுற்ற சாட்சிகள் யாரும் வெற்றிவேல் குப்பற விழுந்ததாக கூறியுள்ளார்களா என்றால் கூறவில்லை. கீழே விழுந்ததாக மட்டும் கூறியுள்ளார்கள். கீழே விழுந்த நபரின் முதுகில் வெட்டியதாக கண்ணுற்ற சாட்சிகள் கூறியுள்ளார்கள். எதிரி ராதாகிருஷ்ணனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் வெற்றிவேல் குப்பற விழுந்ததாக காணப்படுகிறது. சாட்சிகள் குப்பற விழுந்ததாக கூறவில்லை. சாட்சிகளை மீண்டும் அழைத்து வெற்றிவேல் குப்பற விழுந்தாரா இல்லையா என்பது தொடர்பாக நான் குறிப்பாக விசாரிக்கவில்லை. அ.சா.2 ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் கூறிய அனைத்தையும் பதிவு செய்தேனா என்றால் வழக்கு தேவையானதை மட்டும் பதிவு செய்தேன். அவர் சம்பவம் பற்றிய முழு விபரங்களையும் கூறினார். நான் தேவையானதை மட்டும் பதிவு செய்தேன். அ.சா.2 நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது அவர் வழக்கிற்கு தொடர்புடைய சங்கதிகளை என்னிடம் கூறியதாகவும், அது விடுபட்டுள்ளதாகவும் கூறியிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 10 வது எதிரி மாரியப்பனை சாட்சிகள் அடையாளம் காட்டுவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்றால் சரிதான். ஏனென்றால் அவர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும் வரை தலைமறைவாக இருந்தார். 10 வது எதிரி மாரியப்பன் இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் வரை தலைமறைவாக இருந்தார் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. 10 வது எதிரி மாரியப்பன் தொடர்ச்சியாக அவர் ஊரில்தான் வசித்து வந்தார்என்றும், பல பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு கோப்பில் 10 வது எதிரி மாரியப்பனை எந்த எந்த காலகட்டத்தில் எங்கு எங்கு எல்லாம் தேடினோம் என்று வழக்கு நாட்குறிப்பில்

துலங்கும். 10, 13 மற்றும் 15 எதிரிகள் குற்ற சம்பவம் நடைபெற்ற காலத்திற்கு பின்னர் எந்த எந்த செல்போன்கள், சிம்கார்டுகள் பயன்படுத்தினார்கள் என்று எனது விசாரணையில் துலங்காது. 10 வது எதிரி மாரியப்பன் சம்பவத்திற்கு பின்னர் எந்த செல்போனை பயன்படுத்தினார் என்பது குறித்து அவர் எங்கு இருக்கிறார் என்பது குறித்தும், அழைப்பு பட்டியல் மற்றும் இருப்பிடம் பற்றிய விபரங்கள் சேகரிக்கவில்லை. 10 வது எதிரி மாரியப்பனின் தகப்பனார் பெயர் குற்றப்பத்திரிக்கையில் செல்லத்துரை தேவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆஜர் எதிரியின் தந்தை பெயரை உறுதி செய்ய அவரது அடையாள ஆவணங்களை கைப்பற்றி நான் உறுதி செய்து கொள்ளவில்லை என்றால் அவர் தலைமறைவாக இருந்தார். 10 வது எதிரி நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்ட பின்னர் அவரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் பணியிட மாறுதல் பெற்று சென்றுவிட்டேன். 10 வது எதிரி நீதிமன்றத்தில் சரணடைந்த நாளில் வழக்கு விசாரணை என் வசம் இல்லை. செல்லத்துரை தேவரின் மகன் மாரியப்பன் என்பவர் 10 வது எதிரி அல்ல என்றால் சரியல்ல. மளவராயநத்தம் கிராமம் சென்று மாரியப்பன் என்ற நபரை தேடினேனா என்றால் தேடினேன். அந்த கிராமத்தில் எத்தனை மாரியப்பன் என்ற பெயருடைய நபர்கள் உள்ளார் என்று என்னால் கூற இயலாது. 13 வது எதிரி சுரேஷ் சென்னை GT கோர்ட்டில் சரணடைந்தார். அவரை காவல் விசாரணைக்கு எடுக்கும் முன்பு அவர் தாக்கல் செய்திருந்த சரண் புகு மனுவை நான் பார்க்கவில்லை. அவரை காவல் பொறுப்பில் எடுத்து விசாரிக்க நான்தான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தேன். பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு முன்பு அவர் எந்த சிறையில் இருந்தாரோ அங்கு சென்று விசாரிக்கவில்லை. 13 வது எதிரியை காவல் அடைப்பிற்கு எடுக்க நான் தாக்கல் செய்த மனு நகல் கோப்பில் இல்லை. உத்தரவு நகல் உள்ளது. 13 வது எதிரி சுரேஷ்யிடமிருந்து தடயங்களும், சாட்சியங்களையும் கைப்பற்ற முடியும் என்றும் மனுவில் கூறப்பட்டதாக உத்தரவில் உள்ளது. தடயங்களும், சாட்சியங்களும் 13 வது எதிரி சுரேஷ்யிடம் உள்ளது என்று

எனக்கு தகவல் எதுவும் இல்லை அனுமானம்தான். நாங்கள் முன்னதாக தடய பொருட்களை தயாராக வைத்து கொண்டு 13 வது எதிரியிடமிருந்து கைப்பற்றியதுபோல் ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அ.சா.3 ன் வாக்குமூலத்தில் சம்பவம் நடைபெற்றதாக கூறும் நேரத்தில் முத்துகுமார் என்ற நபரும் 10 வது எதிரி மாரியப்பன் என்ற நபரும் நின்று கொண்டிருந்தார் என்று அ.சா.3 க்கு நான் கூறவில்லை. அவர் நபர்களை கூறினார். பெயர்களை கூறவில்லை. நான் அ.சா.3 க்கு கூறியதன்பேரில் அவர் தெரிந்து கொண்டதாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருந்தார் என்றால் நான் அடையாள அணிவகுப்பிற்கு பின்னார் கூறியததை அவர் நீதிமன்றத்தில் கூறியிருக்கலாம். எவ்வாறு கூறினார் என்று எனக்கு தெரியாது. அடையாள அணிவகுப்பிற்கு பின்னர் அ.சா.3 மீண்டும் விசாரிக்கப்பட்டார். அவர் அடையாள அணிவகுப்பு பற்றி மட்டுமே கூறினார். அந்த வாக்குமூலத்தில் எதிரிகள் 13, 15 ஆகியோர்களின் பெயர்களை கூறவில்லை. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது அடையாள அணிவகுப்பில் ஈடுபட்ட சாட்சிகள் 13, 15 எதிரிகளின் பெயர்களை என்னிடம் கூறியதாக சாட்சியம் அளித்திருந்தால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அவர்கள் பெயர் விபரம் பற்றி கூறியதை பதிவு செய்ததாக சாட்சிகள் கூறியிருந்தால் அது பொய் ஆகும். 05.04.2010 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். 90 நாட்களுக்குள் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படும் நாளில் 10 வது எதிரி தலைமறைவு எதிரி என்று காட்டப்பட்டுள்ளது. 10 வது எதிரி தலைமறைவானதால் நீதிமன்றம் அவர் மீது என்ன நடவடிக்கை எடுத்தது என்றால் பிணையானை பிறப்பித்து உத்தரவிட்டது. பிரிவு 82 கு.வி.மு.ச-ன் கீழ் நடவடிக்கை எடுக்க நான் வேண்டுகோள் எதையும் நீதிமன்றத்தில் வைக்கவில்லை. ஏன்னெறால் நான் பணியிடமாறுதலில் சென்றுவிட்டேன். இறுதி அறிக்கைக்கு பின்னர் சுமார் 1 மாதத்திற்கு பின் நான் பணியிடமாறுதலில் சென்றேன். இடைப்பட்ட காலத்தில் நான் பிரிவு 82 குவி.முச படி நடவடிக்கை

மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் பிடியாணை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொண்டுவந்தேன். தலைமறைவு குற்றவாளி என்று அறிவிக்க பிரிவு 82 குவி.மு.சன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. அதற்கு குறிப்பான காரணம் எதுவும் உள்ளதா என்றால் வழக்கு கோப்பிற்கு ஏற்கப்பட்டு பிடியாணை பிறப்பிக்கப்பட்டு அது நிறைவேற்றும் பொருட்டு நடவடிக்கை மேற்கொண்ட நிலையிலேயே நான் பணியிடமாற்றம் செய்யப்பட்டதால் அதற்கான சந்தர்ப்பம் ஏழவில்லை. 10 வது எதிரி மாரியப்பன் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்த பின்னர் சுமார் 1 வருடம் 8 மாதங்கள் கழித்து ஸ்ரீவைகுண்டம் நீதித்துறை நடுவர் முன்பாக சரணடைந்தார் என்றால் சரிதான். 17.12.2011 அன்று சரணடைந்துள்ளார். மேற்கண்ட 1 வருடம் 8 மாதங்கள் வரை எங்கள் துறை சார்பில் 10 வது எதிரியை தலைமறைவு குற்றவாளி என்று அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் எங்கள் கோப்பில் அதுபோன்ற நடவடிக்கை குறிப்புகள் இல்லை. பிடியாணையும் நிறைவேற்றப்படவில்லை என்றால் சரிதான். 10 வது எதிரி தலைமறைவாகவும் இல்லை என்றும், அவர் மீது வழக்கு உள்ள விபரம் அவருக்கு தெரியாது என்றும், அதனால்தான் 1 வருடம் 8 மாதங்கள் வரை அவர் முன்பிணையம் பெறவோ நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பட்டியல் சாட்சி 5, 6 ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்படும் வரை அ.சா1 முதல் 4 சாட்சிகள் பயணம் செய்த ஜீப்பிற்கு முன்னர் சென்ற வாகனங்கள் சற்று வலதுபுறம் ஒதுங்கி நின்றனர் என்பது விசாரணையில் தெரியவந்ததா என்றால் கூறியுள்ளார். அ.சா.1 எனது விசாரணையில் 08.01.2010 அன்று விசாரிக்கப்பட்ட வாக்குமூலத்தில் கூறியுள்ளார். பட்டியல் சாட்சி 5, 6 12.01.2010 அன்று விசாரிக்கப்பட்டுள்ளனர். காயம்பட்ட வெற்றிவேல் டாடா சுமோ வாகனத்தில் பின்பக்க கதவை திறந்து அந்த வாகனத்தில் மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டார். அவ்வாறு சாட்சிகள் எவரும் பின்புற கதவு திறக்கப்பட்டு எடுத்து சென்றதாக கூறியதாக ஞாபகமில்லை. டாடா சுமோ வாகனம் காவல் துறைக்கு

ஒதுக்கப்பட்ட அரசு வாகனம் என்றால் சரிதான். அந்த வாகனம் திருநெல்வேலி ஆயுதப்படை பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட வாகனம் ஆகும். மேற்படி வாகனத்தை நான் பார்வையிட்டேன். அந்த வாகனத்தை பார்வையிட்டபோது அதில் இரத்தக்கறை இருந்ததா, அதை நான் புகைப்படம் எடுத்தேனா என்றால் நான் 12.01.2010 அன்றுதான் பார்த்தேன். அது சுத்தப்படுத்தப்பட்டு இருந்தது. அ.சா.ஆ.73 ல் காயம்பட்ட வெற்றிவேல் 108 ஆம்புலன்ஸ் வாகனத்தில் எடுத்து வரப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். வெற்றிவேல் அம்பை வரை போலீஸ் வாகனத்திலும், அதற்கு பின்னர் மருத்துவமனையிலிருந்து 108 வாகனத்தில் திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டார். 108 ஆம்புலன்சை அம்பை மருத்துவமனைக்கு யார் தகவலின்பேரில் வரவழைக்கப்பட்டது என்றால் யாருடைய உத்தரவின்பேரில் அவ்வாறு திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேற்படி வாகனத்தில் எடுத்து செல்லப்பட்டார் என்று எனக்கு தெரியாது. பொதுவாக அம்பை மருத்துவர் உத்தரவின்பேரில் அந்த வாகனம் மருத்துவமனைக்கு எடுத்து செல்ல பயன்படும். அது எப்போதும் அம்பை அரசு மருத்துவமனையில் நிறுத்தப்பட்டிருக்கும். அ.சா.ஆ.79 ல் முதல் தகவல் கொடுப்பதற்கு அ.சா.1 காவல்நிலையம் வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது, அவருடன் வேறு யாரும் காவல்நிலையத்திற்கு அப்போது வந்ததாக குறிப்பாக கூறபடவில்லை என்றால் சரிதான். அவர் புகார் கொடுக்கும்போது மற்ற கண்ணுற்ற சாட்சிகள் எங்கு இருந்தார்கள் என்பது பற்றி எனது விசாரணையில் துலங்கும். சாட்சிகள் எனது விசாரணையில் புகார்தாரர் புகார் கொடுத்தார் என்று கூறியிருப்பதன்மூலம் அவர்களும் உடனிருந்ததாக கூறுகிறேன். குறிப்பாக புகார்தாரர் மணியுடன் இருந்ததாக வாசகம் எதுவும் இல்லை என்றால் சரிதான். அ.சா.1 மணி காவல்நிலையத்தில் புகார் கொடுக்கும்போது மற்ற கண்ணுற்ற சாட்சிகள் அவருடன் இருந்தார்கள் என்பதை எதனடிப்படையில் கூறுகிறேன் என்றால் கண்ணுற்ற சாட்சிகள் புகார் கொடுத்தார் என்று கூறியிருப்பதால் அவ்வாறு கூறியுள்ளேன். புகார்

கொடுத்தப்போது உடனிருந்ததாக சாட்சிகள் கூறாதநிலையில் நான் உடனிருந்ததாக கூறுவது அனுமானம் என்று சொன்னால் சரியல்ல. கண்ணுற்ற சாட்சிகளில் பிரிவு 161 குவி.மு.சப்படியான வாக்குமூலம் தவிர வேறு ஆவணங்கள் இல்லை. அ.சா.1 புகார் கொடுத்ததாக கூறப்படும்போது மற்ற கண்ணுற்ற சாட்சிகள் எங்கிருந்தார்கள் என்பது குறித்து அ.சா.1 ஐ குறிப்பாக கேட்டு வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் அவ்வாறு கேட்கவில்லை. புகாரை பெற்ற அலுவலர் அ.சா.1 கொடுத்த புகாரில் அறிவேன் சாட்சி என்று மற்றொரு சாட்சியை கையெழுத்திடும்படி கேட்டாரா என்று நான் புகாரை பதிவு செய்தவரை குறிப்பாக கேட்டு பதிவு செய்யவில்லை. அ.சா.1 புகார் கொடுக்கும்போது கண்ணுற்ற சாட்சிகள் எவரும் அப்போது அவருடன் இல்லை என்றும், அதனால்தான் அந்த வாசகங்கள் குறிப்பாக கூறப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரேத விசாரணையின்போது அ.சா.1 விசாரிக்கப்பட்டுள்ளார். பிரேத விசாரணையின்போது வெற்றிவேல் யாரால் எதற்காக காயப்படுத்தப்பட்டார் என்பது அ.சா.1 ஐ விசாரித்தன்மூலம் தெரியவந்ததா என்றால் தெரியவந்தது. அ.சா.1 முதல் அ.சா.4 வரை உள்ள சாட்சிகள் 6 முறை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரிஇருவரை 7 முறை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 கொடுத்த புகாரில் வெற்றிவேலின் வலது கை,ஆள்காட்டி விரல், நடுவிரல், மோதிரவிரல் ஆகியவை வெட்டுப்பட்டு தொங்கிய நிலையில் காணப்பட்டதாக புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கையில் வெட்டப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. கண்ணுற்ற சாட்சிகளை மறு வாக்குமூலம் பதிவு செய்து விசாரித்தபோது வெற்றிவேலின் வலது கை,ஆள்காட்டி விரல், நடுவிரல், மோதிரவிரல் ஆகியவை வெட்டுப்பட்டு தொங்கிய நிலையில் இருந்தது என்பது எவ்வாறு ஏற்பட்டது என குறிப்பாக கேட்கவில்லை. கையின் எந்த பகுதியில் வெட்டப்பட்டதாக சாட்சிகள் குறிப்பாக என்னிடம் கூறவில்லை. கையில் வெட்டியதை மட்டும் பற்றி கூறினார்கள். எதிரி சுரேஷ் குற்றவியல் நடைமுறை சட்டம் 164 ன் படியான வாக்குமூலம் கொடுப்பதற்கு முன்பு

அடைக்கப்பட்ட சிறையில் அவரை சந்தித்து நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. எதிரி சுரேஷ் தானாக முன்வந்து தாயாக உள்ளார் என்ற விபரம் எவ்வாறு தெரிந்தது என்றால் அவர் நீதிமன்ற அனுமதியுடன் காவல் துறையினரின் பாதுகாப்பில் வைத்து விசாரிக்கப்பட்டபோதே அந்த விபரங்களை கூறியிருந்தார். சுரேஷ் நீதிமன்றத்தில் கொடுத்த 164 குவி.மு.சபடியான வாக்குமூலம் தன்னிச்சையானது அல்ல என்றும், நாங்கள் அவரை குண்டர் தடுப்பு சட்டத்தில் அடைக்கப்போவதாக அச்சுறுத்தியன்பேரிலேயே நாங்கள் கூறிய விபரங்களை அவர் வாக்குமூலமாக நீதித்துறை நடுவரிடம் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. சென்னை GT கோர்ட்டில் சரணடைந்த சுரேஷை பாளையங்கோட்டை சிறைச்சாலைக்கு எடுத்து வந்த வழிகாவல் காவல் துறையினர் எந்த பிரிவை சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் பொதுவாக அருகில் உள்ள ஆயுதப்படைபிரிவில் இருந்து சிறைச்சாலை துறையினர் உதவி கேட்பார்கள். எனவே எதிரி சுரேஷ் சென்னை ஆயுதப்படை பிரிவில் இருந்து வழிகாவல் உதவியுடன் அனுப்பப்பட்டிருக்கக்கூடும். அ.சா.ஆ.84 ல் எதிரிகள் இருவரும் 164 கு.வி.மு.ச பிரகாரம் நீதிமன்றத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 31.01.2010 அன்று எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் அவர்கள் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டு சிறைச்சாலையில் இருந்து வந்துள்ளனர். 01.02.2010 அன்று வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. எங்களது விசாரணையின்போது எதிரிகள் பிரிவு 164 குவிமுச-ன் படியான வாக்குமூலம் கொடுப்பதாக கூறியிருந்தனர். அ.த.சா.ஆ.45 ல் (ஒப்புதல் வாக்குமூலத்தில்) எதிரி சுரேஷ் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்க தயாராக இருப்பதாக கூறிய விபரங்கள் காணப்படவில்லை. அவர் எங்களது விசாரணையில் வாய்மொழியாக கூறியதன் அடிப்படையில் வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது. வேண்டுகோள் கடிதத்தில் சுரேஷ் பிரிவு 164 குவிமுச-ன் படியான வாக்குமூலம் கொடுக்க தயாராக இருந்தார்

என வாய்மொழியாக கூறியிருந்தார் என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். அவரது விருப்பத்தை வாய்மொழியாக கூறியிருந்தார் என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனங்கள் நீதிமன்றத்தில் 08.01.2010 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. எப்போது நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது என்றால் 22.02.2010 அன்று பெறப்பட்டதாக நீதிமன்ற ஆவணங்களில் காணப்படுகிறது. சம்பவ நடந்த இடத்தில் வாகனத்தை ஓட்டி வந்தவர் நின்று விட்ட வாகனத்தை மீண்டும் இயக்க முயற்சித்து முடியாமல் போனதால் விட்டுவிட்டு சென்ற வாகனம் 08.01.2010 அன்று நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. TN 72 X 444 Zusiki Max 100 R என்ற இருசக்கர வாகனம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் காவல்நிலைய பாதுகாப்பில் நீதிமன்றத்தால் காவல்நிலையத்தில் பெறப்பட்டு மீண்டும் 20.02.2017 அன்று காலை 10 மணிக்கு காவல் நிலைய பொறுப்பிலிருந்து திருநெல்வேலி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் ஒப்படைக்ககோரி நீதித்துறை நடுவர் அம்பாசமுத்திரத்திலிருந்து காவல் துறைக்கு ஒரு அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். Shooting report and usage of Bullet report என்ற இரண்டு அறிக்கைகள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வெற்றிவேலை வெட்டி காயப்படுத்திய போது அவரது காயங்களிலிருந்து வெளியேறிய இரத்தம் காயப்படுத்தியவர்களின் ஆடைகளில் படிந்திருந்தது என்பது குறித்து சாட்சிகள் எவரும் குறிப்பிட்டு கூறவில்லை. எதிரிகள் அணிந்திருந்ததாக கூறப்படும் ஆடைகள் கைப்பற்றப்பட்டபின்னர் அந்த ஆடைகளில் இறந்தவர் உடலில் காயங்களிலிருந்து வெளியேறிய இரத்தம் எவ்வாறு படிந்தது என்பது குறித்து சாட்சிகள் எவரும் குறிப்பிட்டு கூறவில்லை. 13, 15 எதிரிகளை பொறுத்து கண்ணுற்ற சாட்சிகள் அடையாளம் காட்ட தயாராக உள்ளதாக எனது விசாரணையின்போது கூறவில்லை. பார்த்தால் அடையாளம் காட்ட கூடிய நபர்கள் என்று தான்

கூறினார்கள். வெற்றிவேலை காயப்படுத்தியவர்கள் கடனாநதி ஆற்றுப்பாலத்தை தாண்டி மேற்காக சென்று தெற்காக ஓடினார்கள் என்று கூறியுள்ளார்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது)**

Sd/- B.Rajavel,
Principal District Judge,
Tenkasi